7th March 1961]

SRI A. A. RASHEED : What is the number of persons so far vaccinated in this district?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think out of a total population of 20 lakhs, about 15 or 16 lakhs of people are covered.

SRI S. NAGARAJA MONIGAR : செங்கற்பட்டு ஜில்லாவி லிருந்து இந்த வியாதியை அறவே ஒழிப்பதற்கு அது வந்த பின் தடுக்கும் முறையைக் கையாள்கிறார்களா? அல்லது வருவ தற்கு முன் எக்காரணத்தால் அது வருகிறது என்று அறிந்து அதை நிவர்த்திக்க இத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக் கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : செங்கல்பட்டு ஜில்லா மட்டுமல்ல. இந்த மாநிலத்திலிருந்தே இந்த நோயை ஒழிக்கத் திட்டம் இருக்கிறது. இது இப்பொழுது ஏற்பட்டது, பைலட் ஸ்கீம். முன்கூட்டியே பார்த்து எப்படி எப்படி மேற் கொண்டு திட்டம் போடவேண்டுமென்று ஸ்கீம், ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு ஜில்லா என்ற முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பணம் மத்திய அரசாங்கம் கொடுத் தார்கள். இந்த வருடத்திலிருந்து திட்டம் போட்டு மாகாணம் முழுவதும் இத்திட்டத்தை அமுலாக்கவேண்டும். மூன்று வருடங் களில் இந்த நோயை ஒழிக்கத் திட்டம்.

SRI M. K. SOMASUNDARAM : இந்தத் திட்டம் 28-2-1961-ல் முடிவாகயிருந்தது. இப்பொழுது 31-3-1961-க்கு நீடிக்கப்பட்டிருக் கிறது. இதன் செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார் களா அல்லது சென்னை சர்க்கார் ஏற்றுக்கொள்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே கொஞ்சம் காலதாமதமாகியிருக் கலாம். கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ஒத்துக்கொண்டுதான் நீடித் திருக்கிறோம். அநேகமாக அவர்கள்தான் இந்தப் பணத்தை ஒத்துக் கொள்வார்கள் என்று தெரிகிறது.

Medical Research courses

* 638 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether Research facilities for M.D., and other Research courses are offered in the Stanley Medical College and Hospital;

(*b*) whether any order has been passed by the Government granting sanction to the Stanley Medical College and Hospital to take up Research scholars; if so, when; and

(*c*) whether any students have applied for permission to do Research work there, and if so, whether they have been permited ; if not, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Research facilities are available for Ph.D. course in Anatomy in the Stanley Medical College. No other course requires research.

(*b*) & (*c*) No, Sir.